## சிறப்புக்குறிப்பு 18 முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் 2011[1]

### உண்மைத்துறை

2011 சனவரி 01 - சராசரி மின் தீர்வை 8 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

2011 மாச்சு 01 - பண்ணை விலைகளிலான உடன் பாலின் ஆகக் குறைந்த கொள்வனவு விலையானது லீற்றரொன்றுக்கு ரூபா 35 இலிருந்து லீற்றரொன்றுக்கு ரூபா 50 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2011 ஏப்பிறல் 02 - பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன :
- பெற்றோல் ரூபா 10 இனால் லீற்றரொன்றுக்கு ரூபா 125 இற்கு
- டீசல் ரூபா 3 இனால் லீற்றரொன்றுக்கு ரூபா 76 இற்கு
- மண்ணெண்ணெய் ரூபா 10 இனால் லீற்றரொன்றுக்கு ரூபா 61 இற்கு

- திரவப்பெற்றோலிய வாயுவின் 12.5 கிலோக்கிறாம் உருளையொன்றின் விலையானது ரூபா 238 இனால் ரூபா 1,890 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2011 மே 03 - 400 கிராம் முழு ஆடைப்பால் மா பையொன்றின் அதிகபட்ச சில்லறை விலையானது ரூபா 20 இனால் ரூபா 264 இற்கு அதிகரிக்கப்பட்டதுடன் 1 கிலோக்கிறாம் முழு ஆடைப் பால் மா பையொன்றின் அதிகபட்ச சில்லறை விலையானது ரூபா 49 இனால் ரூபா 647 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2011 யூன் 30 - தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமானது 2006/2007 இல் நடாத்தப்பட்ட வீட்டுத்துறை வருமான மற்றும் செலவின மாதிரியை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொ.நு.வி.சு) (2006/07=100) இன் புதிய தொடரொன்றினை அறிமுகப்படுத்தியது.

- மையப் பணவீக்கத்திற்கான (அடிப்படைப் பணவீக்கம்) திருத்தப்பட்ட அளவீடு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய மையப்பணவீக்க அளவீடானது, கொ.நு.வி.சு (2006/07=100) பொருட்கூடையிலிருந்து உடன் உணவு, வலு, போக்குவரத்து, அரிசி மற்றும் தேங்காய் என்பனவற்றை நீக்குவதன் மூலம் பெறப்பட்டது.

2011 ஓகத்து 20 - திரவப்பெற்றோலிய வாயுவின் 12.5 கிலோக்கிறாம் உருளையொன்றின் விலையானது ரூபா 156 இனால் ரூபா 2,046 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2011 ஒத்தோபர் 30 - பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன :
- பெற்றோல் ரூபா 12 இனால் லீற்றரொன்றுக்கு ரூபா 137 இற்கு
- டீசல் ரூபா 8 இனால் லீற்றரொன்றுக்கு ரூபா 84 இற்கு
- மண்ணெண்ணெய் ரூபா 10 இனால் லீற்றரொன்றுக்கு ரூபா 71 இற்கு

2012 பெப்புரவரி 12 - பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன :
- பெற்றோல் ரூபா 12 இனால் லீற்றரொன்றுக்கு ரூபா 149 இற்கு
- டீசல் ரூபா 31 இனால் லீற்றரொன்றுக்கு ரூபா 115 இற்கு
- மண்ணெண்ணெய் ரூபா 35 இனால் லீற்றரொன்றுக்கு ரூபா 106 இற்கு

2012 பெப்புரவரி 14 - பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் பொதுவான சராசரியாக 20 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.

2012 பெப்புரவரி 15 - மாதாந்த மின் பட்டியல் மீது எரிபொருள் திருத்தத் தீர்வை பின்வரும் வீதங்களில் விதிக்கப்பட்டது :

| துறை | எரிபொருள் திருத்தத் தீர்வை (%) |
|---|---|
| வீட்டுத்துறை பாவனையாளர்கள் | |
| 0 – 30 (அலகுகள்/மாதம்) | 25 |
| 31 – 60 (அலகுகள்/மாதம்) | 35 |
| 60 இற்கு மேல் (அலகுகள்/மாதம்) | 40 |
| கைத்தொழில்கள் | 15 |
| விடுதிகள் | 15 |
| பொது நோக்கம் | 25 |

1 இது 2011 இல் இடம்பெற்ற முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்களையும் வழி முறைகளையும் உள்ளடக்குகின்றது. 2012இன் முதல் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் 2012 இல் நடைமுறைப்படுத்த இருக்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளும்கூட உள்ளன.

## வெளிநாட்டுத் துறை

### வர்த்தகமும் தீர்வையும்

2011 சனவரி 01 - நிதி அமைச்சரினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு, அரசாங்க அமைச்சுக்களுக்கு நேரடியாக வழங்கப்படும் கொடைகள் அல்லது வெளிநாட்டு கடன்களின் மூலம் நிதியிடப்படும் எந்தவொரு உட்கட்மைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

- நிதி அமைச்சரினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு, இலங்கையில் ஆயுர்வேத தயாரிப்புக்களை (அழகு சாதன பொருட்கள் தவிர்ந்த) உற்பத்தி செய்வதற்கெனப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் மற்றும் ஆயுர்வேத தயாரிப்புக்களை பொதி செய்வதற்கென பிரத்தியேகமாகப் பயன்படும் பொதிசெய்யும் பொருட்களின் இறக்குமதி என்பன தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- இணங்குவிப்புக் குறியீடு 2713.20 மற்றும் இணங்குவிப்புத் தலைப்பு 27.14 என்பவற்றின் கீழ் வரும் பிற்றுமனின் இறக்குமதி மற்றும் இணங்குவிப்பு குறியீடுகள் 8701.10.10, 8701.10.90, 8701.90.10 மற்றும் 8701.90.20 என்பவற்றின் கீழ்வரும் இழுவை இயந்திரங்களின் இறக்குமதி என்பன தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- தோல் அல்லது பாதணிக் கைத்தொழிலுக்கான பொறி மற்றும் உபகரணம், உயர் தொழில்நுட்ப மருத்துவ, ஆய்வுகூட மற்றும் கல்விசார் உபகரணம், வாடகை ஊர்தி, அளவுமானிகள், வேளாண்மை பொறிகள் மற்றும் பகுதிகள், இலத்திரனியல் உபகரணங்கள், நாகரீக அணிகலன்களின் தயாரிப்பிற்காகப் பயன்படும் பொருட்கள், தொலைத் தொடர்பாடல் கைத்தொழிலில் பயன்படும் பொறி மற்றும் உயர் தொழில்நுட்ப சாதனம், வான்கலப் பயணப் பாவனையாக்கி மற்றும் பாகங்கள் போன்றவற்றின் சில வகைகளின் இறக்குமதி பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

2011 சனவரி 11 - பெற்றோல் இறக்குமதியின் மீது வழங்கப்பட்டிருந்த சுங்கத் தீர்வைத் தளர்த்தலானது லீற்றரொன்றுக்கு ரூபா 20 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூபா 30 இற்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, பிரயோகிக்கத்தக்க தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூபா 5 ஆக இருக்கும்.

2011 சனவரி 22 - பால்மா இறக்குமதியின் மீது முழுமையான சுங்கத் தீர்வைத் தளத்தல் வழங்கப்பட்டது.

2011 பெப்புரவரி 20 - உருளைக் கிழங்குகளின் மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 10 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 20 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.

2011 ஏப்பிறல் 01 - பெற்றோல் இறக்குமதியின் மீது முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.

2011 ஏப்பிறல் 10 - நெத்தலிக் கருவாடு, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், உள்ளி, பட்டாணி, பச்சைப் பட்டாணி, பாசிப்பயறு, பருப்பு, மிளகாய், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் சீனி என்பவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது மேலும் நான்கு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

2011 ஏப்பிறல் 24 - இறக்குமதிக்கு தகுந்த உந்து ஊர்திகளின் கூடிய வயது எல்லை மூண்றரை ஆண்டுகளிலிருந்து இரண்டு ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.

2011 மே 03 - உருளைக் கிழங்குகளின் மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 20 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 30 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.

2011 ஓகத்து 10 - உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், மற்றும் உள்ளி என்பனவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது முறையே கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 30இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு 35இற்கும், கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 10 இலிருந்து கிலோக்கிறாமொன்றக்கு ரூபா 25 இற்கும் மற்றும் கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 10 இலிருந்து கிலோக்கிறாமொன்றக்கு ரூபா 25 இற்கும் இன்னுமொரு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.

- நெத்தலிக் கருவாடு, சின்ன வெங்காயம், பட்டாணி, பச்சைப் பட்டாணி, பருப்பு, பாசிப்பயறு, மிளகாய், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் சீனி என்பனவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது மேலும் நான்கு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

2011 ஓகத்து 30 - கோதுடனான மரமுந்திரிப் பருப்பின் (இணங்குவிப்புக் குறியீடு 0801.31.10 மற்றும் இணங்குவிப்புக் குறியீடு 0801.31.90) இறக்குமதி மீது 30 சதவீதமான முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.

2011 ஒத்தோபர் 14 - பாசிப்பயறு மற்றும் தூளாக்கப்பட்ட அல்லது அரைத்த மிளகாயின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது முறையே கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 15 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 30 இற்கும், கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 25 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 40 இற்கும் அதிகரிக்கப்பட்டது.

- உழுந்து கிலோக்கிறாமொன்றிற்கு ரூபா 90, தட்டைப்பயறு கிலோக்கிறாமொன்றிற்கு ரூபா 75 மற்றும் குரக்கன் மற்றும் ஏனைய திணை வகைகளின் மீது கிலோக்கிறாமொன்றிற்கு ரூபா 30 என்ற அளவிலான இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.

2011 நவெம்பர் 22 - பச்சைப்பட்டாணி, உழுந்து மற்றும் தட்டைப்பயறு என்பனவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது முறையே கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 30 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 50 இற்கும் கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 90 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 100 இற்கும் மற்றும் கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 75 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 100 இற்கும் அதிகரிக்கப்ட்டது.

- குரக்கன் மற்றும் திணை வகைகள் மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 30 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 75 இற்கு அதிகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| | - மாசிக்கருவாடு, கருவாடு, தெரிவுசெய்யப்பட்ட பழங்கள், தெரிவு செய்யப்பட்ட வாசனைத்திரவியங்கள், திணை மா, உழுந்து மா, நிலக்கடலை (கோதுடன்) போன்ற சில தெரிவு செய்யப்பட்ட உணவு விடயங்களின் இறக்குமதி மீது நான்கு மாத காலப் பகுதிக்கான விசேட பண்டத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | - சிறிய நீர்வலு செயற்றிட்டங்களுக்கான பைப்புகள், பட்ல் இறப்பர், இறப்பர் கையிற்றுக்கள், கழிவு இரும்பு, வார்ப்பூட்டுகள், உலோகக் குவளைகளுக்கான இலகு திறப்பான்கள், வெட்டுக் கருவித் தொகுதி, சவரக்கத்திகள் மற்றும் விளையாட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் தீர்வை நீக்கப்பட்டது. |
| | - மாப்பொருள், முதன்மை வடிவத்திலான எத்தலினின் பல்பகுதியங்கள், பிளாத்திக்கிலான சுகாதாரப்பொருட்கள், உருக்குத்தொட்டிகள், குளியல் தொட்டிபகள், அழகுசாதன அல்லது ஒப்பனைத் தயாரிப்புக்கள், விளையாட்டுப் பைகள், ஆடைகள், பாதணிகள், தொப்பிகள், வெண்களிமண் அலங்காரப்பொருட்கள், மட்பாண்டப்பொருட்கள், பயணப் பைகள், கைப் பைகள், இடுப்புப் பட்டிகள், ரீ-சேர்ட்டுக்கள், காற்சட்டைகள், விளையாட்டு (பந்தய) சூட்டுகள், நீச்சல் உடைகள் மற்றும் சப்பாத்துக்கள் என்பனவற்றின் இறக்குமதி மீதான செஸ் தீர்வை குறைக்கப்பட்டது. |
| | - உலர்த்திய மரக்கறிகள் மற்றும் உலர்த்திய பழங்கள், ஊதுவத்திகள் மற்றும் வைநல் குளோரைட் என்பவற்றின் சில வகை இறக்குமதிகள் மீதான செஸ் தீர்வை அதிகரிக்கப்பட்டது. |
| | - கோதுமை மா, திரிபோஷா, குளிரூட்டிகள், துவிச்சக்கர வண்டி ஓரங்கள், மென்துணிகள் மற்றும் காயக்கட்டுக்கள் மீது செஸ் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | - மூல இறப்பரின் ஏற்றுமதி மீதான செஸ் தீர்வை அதிகரிக்கப்பட்டது. |
| | - இயற்கைக் காரீயம், களிமண், மண், பொசுபேற்று, கற்கள், கருங்கல், மண்கட்டிகள், மைக்கா, இல்மனைற்று, ரூத்தைல், தைத்தேனியம், சிர்க்கோனியம் மற்றும் வெட்டு மரக் குற்றிகள் என்பவற்றின் ஏற்றுமதி மீது செஸ் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | - பிறெய்லி தட்டச்சு இயந்திரங்கள், பிறெய்லி தட்டச்சு இயந்திரங்களின் பாகங்கள், தயாரிக்கப்பட்ட பசைகள் மற்றும் ஏனைய ஒட்டுபசைகள், தெவிட்டிய பொலியெஸ்தர்கள், வல்கனைசுப்படுத்தப்படாத கலக்கப்பட்ட இறப்பர், ஜெலற்றின் குளிகைகள், மூக்குக்கண்ணாடிக்கான மூலப்பொருட்கள், இலகுவாகத் திறக்கும் மூடிகள், விளையாட்டு பாதணிகள், டீசல் எந்திரம் (புதியது), பொருட்களைக் கொண்டு செல்வதற்கான ஊர்திகள், விளக்குகள் மற்றும் ஒளியியல் பொருத்துக்களின் தெரிவு செய்யப்பட்ட விடயங்கள், தன்னியக்க தரவு செய்முறைப்படுத்தல் கருவிகள், வெண்களி மண்ணாலான அலங்காரப் பொருட்கள், மட்பாண்ட பொருட்கள், கறுப்புக் கண்ணாடி மற்றும் முடி அலங்கார உபகரணங்கள் என்பவற்றின் இறக்குமதிகள் சுங்கத்தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - வினைல் அசற்றேற்றின் பல்பகுதியங்கள், வல்கனைசுப்படுத்தப்பட்ட இறப்பர் கயிற்று நூல் மற்றும் இறப்பர் மற்றும் பிளாத்திக்குகளுக்கான வார்ப்புக்கள் என்பனவற்றின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையானது 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |
| | - உருக்கு மற்றும் அமைப்புகளின் பாகங்கள், சவரக்கத்திகள், கண்ணாடிப்பொருட்கள் மற்றும் முன்புனைவுக் கட்டடங்கள் என்பவற்றின் இறக்குமதி மீதான சுங்கத்தீர்வையானது 30 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | - குளிரூட்டிகளின் இறக்குமதி மீதான சுங்கத்தீர்வையானது 30 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | - பேருந்து மற்றும் பார ஊர்திகளில் பயன்படுத்தப்படும் இறப்பர் ரயர்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையானது 30 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | - சோளம், சோயா அவரை மற்றும் பாசிப்பயறு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட உணவுத் தயாரிப்புக்களின் இறக்குமதி மீது சுங்கத்தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | - இறப்பர்களாலான காற்றூட்டிய ரயர்களின் இறக்குமதி மீதான சுங்கத்தீர்வை அதிகரிக்கப்பட்டது. |
| | - வர்த்தக அடையாளமுள்ள பாதணி வகைகள் மீதான சுங்கத்தீர்வையானது சோடியொன்றுக்கு ரூபா 100 இற்கு மட்டுப்படுத்தப்பட்டது. |
| | - மின்னியல் உந்து ஈருருளிகள் (இணங்குவிப்புக் குறியீடு 8711.90.10) மற்றும் முதன்மை வடிவங்களிலான எதலினின் பல்பகுதியங்கள் (இணங்குவிப்புத் தலைப்பு 39.01) என்பன உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| 2011 திசெம்பர் 10 | - உருளைக் கிழங்குகளின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 35 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 20 இற்கு நான்கு மாத காலத்திற்கு குறைக்கப்பட்டது. |
| 2012 சனவரி 01 | - பின்வரும் விடயங்கள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன:<br>- ஒலிபெருக்கிகள் மற்றும் மிகைப்பிகள், டிஜிட்டல் ஸ்ரீரியோ புரொசசர்கள் மற்றும் உபகரணங்கள், திரைப்பட ஊடக ப்ளேயர்கள் மற்றும் டிஜிட்டல் வாசிப்பிகள் என்பனவற்றின் இறக்குமதிகள்<br>- விவசாயிகளினால் மேற்கொள்ளப்படும் பசுமைக்குடில்கள், பல்படிக குடைவுகள் மற்றும் பசுமைக்குடில்கள் மற்றும் பல்படிக குடைவுகளின் கட்டுமானத்திற்கான மூலப்பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதி |

- சரக்கு வண்டிகள், பாரவண்டிகள், பேருந்துகள், விளையாட்டு சாதனங்கள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திக்குப் பயன்படும் இயந்திரங்கள், அரிந்த மரம், கறுப்புக்கண்ணாடிகள், வாசனைத்திரவியங்கள், மண்வெட்டிகள், முட்கரண்டிகள், வார்ப்புக்கள் (உருக்கு, கண்ணாடி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு), மற்றும் கோழி வளர்ப்புத் துறைக்கான உதிரிப்பாகங்கள், புகைப்பட உணர்திறன் குறை கடத்தி கருவிகள், மூக்குக்கண்ணாடிகள் மற்றும் மூக்குகண்ணாடிச் சட்டங்களைத் தயாரிப்பதற்கென பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதி அல்லது வழங்கல்

- வானூர்திகள், கப்பல்கள், செயற்கைக்கால்கள், ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், கேட்புத்திறன் கருவிகள், அத்தகைய கருவிகளுக்கான உபகரணங்கள், விழிப்புலனற்றவர்களுக்கான வெள்ளைப் பிரம்புகள், பிறெய்லி தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் பாகங்கள், பிறெய்லி எழுதும் தாள்கள் மற்றும் பலகைகள், மரக்குத்திகள், தையல் நூல் மற்றும் தாவர நாரை அடிப்படையாகக் கொண்ட நூல் தவிர்ந்த ஏனைய நூல் மற்றும் துணி என்பவற்றின் இறக்குமதி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

2012 சனவரி 13

- சீனி, முழு மைசூர் பருப்பு, உடைக்கப்பட்ட மைசூர் பருப்பு மற்றும் உள்ளி போன்ற தெரிவு செய்யப்பட்ட உணவு விடயங்களின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.
- உடன் அல்லது குளிரூட்டப்பட்ட மற்றும் உறைய வைக்கப்பட்ட மீன் மற்றும் சோயா அவரை எண்ணெய், தாவர எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட சமையல் எண்ணெய் வகைகளின் இறக்குமதி மீது நான்கு மாத காலப்பகுதிக்கு விசேட பண்டத்தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.
- பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீது வழங்கப்பட்டிருந்த முழுமையான சுங்கத்தீர்வைத் தளர்த்தலானது முறையே லீற்றரொன்றுக்கு ரூபா 35 இலிருந்து லீற்றரொன்றுக்கு ரூபா 23 இற்கும் லீற்றரொன்றுக்கு ரூபா 15 இலிருந்து லீற்றரொன்றுக்கு ரூபா 13 இற்கும் குறைக்கப்பட்டது.

2012 மாச்சு 01

- உருளைக் கிழங்குகளின் மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 20 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 30 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2012 மாச்சு 31

- இறக்குமதி செய்யப்பட்ட உந்து ஊர்திகளின் உதிரிப்பாகங்களுக்கு விதிக்கப்பட்ட சுங்கத் தீர்வை விகிதங்கள் திருத்தப்பட்டன.
- இணங்குவிப்பு தலையங்கம் 87.03 மற்றும் 87.02 (பேருந்துக்களை தவிர்ந்த) கீழான இறக்குமதிக்கு தகுந்த உந்து ஊர்திகளின் ஆகக்கூடிய வயது எல்லை ஒரு ஆண்டாக திருத்தப்பட்டதுடன் இனங்குவிப்பு தலையங்கம் 87.04 கீழானவைக்கு வயதெல்லை மூன்றரை ஆண்டுகளாக திருத்தப்பட்டன.

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

2011 சனவரி 01

- இலங்கையில் வதியும் தனிநபர்கள், இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கூட்டுத்தொழில்கள் மற்றும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் வெளிநாட்டு அரசாங்கங்களால் வழங்கப்படும் நாட்டிற்கான முறிகள் மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளின் பங்குகள் என்பவற்றில் முதலிடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.
- இலங்கைக் கம்பனிகள் மற்றும் பங்குடமைகள் இலங்கைக்கு வெளியே வியாபார இடங்களை ஆரம்பிப்பதற்கு வதிவற்றோர் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

2011 சனவரி 06

- தங்களது தொழிற்படு மூலதனம் மற்றும் நிலையான மூலதன தேவைப்பாடுகளை சந்திப்பதற்குப் போதுமான வெளிநாட்டு நாணய வெளிப்படுத்தலைக் கொண்டிருக்கும் பணிகளை ஏற்றுமதி செய்வோருக்கு உள்நாட்டு வங்கித் தொழில் கூறிலிருந்து வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

2011 சனவரி 21

- வதிவுள்ளோரின் வெளிநாட்டு முதலீடுகளை வசதிப்படுத்தும் விதத்தில் "வெளிமுக முதலீட்டு கணக்கு" எனப் பெயரிடப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2011 மே 16

- தெரிவு செய்யப்பட்ட வங்கியல்லா நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகளுக்கு நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

2011 ஓகத்து 18

- கூறு நம்பிக்கைகளில் வெளிநாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டு நிதி முதலீடுகள் மீதான செலாவணிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.
- கல்விசார் நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர்கள் வெளிநாட்டில் இருக்கும் வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள் பல்கலைக் கழகங்கள் அல்லது கல்வித் தாபனங்களிலிருந்து கடன் பெறுவதற்கும் அத்தகைய கடன்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களூடாக இலங்கையிலிருந்தான பணவனுப்பல்கள் மூலம் மீளச் செலுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.
- வதிவற்ற இலங்கையரிடமிருந்து இலங்கையிலுள்ள உண்மைச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதைப் பொறுத்தவரை வதிவுள்ளவர்கள் இலங்கை ரூபாவில் வதிவற்ற இலங்கையருக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.
- வதிவற்ற இலங்கையர்களின் பெயரில் வதிவற்றோர் "தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளை" ஆரம்பிப்பதற்கும் அத்தகைய வதிவற்றோரின் உள்ளூர் வருமானத்தை வரவு வைப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

- இலங்கை ரூபாவில் செலுத்தப்படும் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதிய நன்மை தவிர்ந்த ஏனைய ஊழியர் நன்மைகளை வெளிநாட்டு ஊழியர்களின் இலங்கையரல்லாத வதிவுள்ளோர் நாணயக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

2011 நவெம்பர் 22 - தொகுதிக்கடன்களிலான வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான ஒழுங்குவிதிகள், வட்டி வீதத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த உச்ச எல்லை மற்றும் வழங்கும் நிறுவனத்தால் பேணப்பட வேண்டிய கடன்கரைப்பு நிதியத்தின் தேவைப்பாடு என்பன நீக்கப்பட்டதுடன் ஆகக்குறைந்த காலப்பகுதியை ஐந்து ஆண்டுகளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குக் குறைத்ததன் மூலம் தளர்த்தப்பட்டன.

2011 திசெம்பர் 06 - திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளிலான வெளிநாட்டு முதலீடுகளுக்கான கீழ்மட்டமானது முறையே வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் 10 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2011 திசெம்பர் 13 - வெளிநாட்டுக் கடன்பாடுகள் தொடர்பில் உள்நாட்டு நிறுவனங்களுக்குப் பிரயோகிக்கத்தக்க தற்போதைய வரையறையானது ஐ.அ. டொலர்கள் 20 மில்லியனிலிருந்து ஐ.அ. டொலர்கள் 50 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

**அடுத்து வருவது**

- இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பயன்படுத்தி தனிப்பட்ட தேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரையறையை அதிகரித்தல்.
- பட்டியலிடப்பட்ட கம்பனிகள் வெளிநாட்டில் முதலிடுவதன் மீது பிரயோகிக்கத்தக்க தற்போதைய வரையறையை அதிகரித்தல்.
- அனைத்து முதலீட்டுக் கணக்குகளையும் ஒன்றிணைப்பதன் மூலம் இலங்கையில் வெளிநாட்டு முதலீகளுக்கான பொதுவான கணக்கொன்றை அறிமுகப்படுத்துதல்.
- உள்நாட்டுக் கம்பனிகள் வெளிநாட்டு பங்குப் பரிவர்த்தனைகளில் பட்டியலிடப்படுவதற்கான அனுமதியை வழங்குதல்.
- வதிவற்றவர்களுக்கு குறிக்கப்பட்ட மீட்புக்காலத்துடனான மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை வழங்குவதற்குரிய அனுமதியை வழங்குதல்.
- அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வழங்கிய உத்தரவாதக் கடிதங்கள் மீதான தற்போதைய வரையறையை அதிகரிப்பதற்கான அனுமதியை வழங்குதல்.
- வெளிநாடுகளுக்குப் பயணிக்கும் போது கொண்டு செல்லத்தக்க இலங்கை நாணயத்தாள்களின் வரையறையை அதிகரித்தல்.
- இலங்கை சுற்றுலாச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட விடுதிகள் மற்றும் உணவகங்களுக்கு நாணய மாற்று உரிமங்களை வழங்குதல்.
- வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளுக்கு அனுமதி வழங்குதல்.

## இறைத்துறை

**அரச அரசிறை**

2011 சனவரி 01 - 20 சதவீதமான பெறுமதிசேர் வரி 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதன்படி பூச்சிய வீதத்தைத் தவிர ஒரே ஒரு பெறுமதிசேர் வரி வீதம் மட்டுமே நடைமுறையிலிருக்கும்.

- வெளியீட்டு வரியின் 85 சதவீதம்வரை கோரக்கூடியதாக இருந்த உள்ளீட்டு வரியின் கட்டுப்பாடு 100 சதவீதம்வரை நீடிக்கப்பட்டது.
- கீழ்வரும் பணிகள் மீதான பெறுமதிசேர் வரி விலக்களிக்கப்பட்டது:
  - தொலைத் தொடர்புப் பணிகள்
  - உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கரித்தூள் மற்றும் இயற்கைக் கழிவிலிருந்து செய்யப்படும் மரத்துண்டுகள்
  - உள்நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள்
  - காப்புறுதித் தொழிலில் இழப்பீடாகவோ அல்லது முகவர் சேவைக் கட்டணமாகவோ ஏதாவது உள்நாட்டு காப்புறுதி நிறுவனத்தால் பெறப்படும் மீள் காப்புறுதிப் பெறுகைகள்.

- 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்பாடல் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட தொலைத் தொடர்பாடல் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக் குழுவினால் உள்நாட்டு தொலைத் தொடர்பு தொழிற்படுத்துநர்களுக்கு வழங்கப்படும் உரிமம்.

- மாகாண சபைகளினால் சேகரிக்கப்பட்ட புரள்வு வரி நீக்கப்பட்டது.
- தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் நோக்கெல்லையானது, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்தைக் கொண்டு நடத்தும் ஆட்களையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவுபடுத்தப்பட்டது.
- தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி வீதமானது 3 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- மாதமொன்றுக்கு ரூபா 500,000 கொண்ட தொகையினை விஞ்சாத பணிகள் தவிர்ந்த, எந்தவொரு பொருள் அல்லது பணியின் வழங்கலிலிருந்தான வரி விதிக்கத்தக்க பொறுப்பினைக் கொண்டுள்ள நபர்கள் அல்லது காலாண்டொன்றுக்கு ரூபா 25 மில்லியனை விஞ்சாத பின்வரும் நடவடிக்கைகளிலிருந்தான மொத்தப்புரள்விற்குப் பொறுப்பான ஆட்கள் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினைச் செலுத்துவதற்குப் பொறுப்புடையவர்கள் அல்லர்.
  - விடுதி, தங்கும் இல்லம், உணவகம் அல்லது அதுபோன்ற வியாபாரங்களின் தொழிற்படுத்தல்
  - விற்பனைக்கான தயாரிப்பில் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படும் எந்தவொரு வேளாண்மை விளைபொருட்களினதும் பதப்படுத்தல் செயன்முறை
  - கல்விசார் பணிகளை வழங்குவதற்காக உள்நாட்டில் தாபிக்கப்பட்ட எந்தவொரு நிறுவனத்தினதும் பணி வழங்கல்
  - தொழிலாளர்களின் வழங்கல் (மனித வலு)
- பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி தீர்வை நீக்கப்பட்டது.
- தொலைத் தொடர்பாடல் பணிகளின் மீதான பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் செலூலர் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர் தீர்வை என்பவற்றை பதிலீடு செய்யும் 20 சதவீதத்திலான தொகுக்கப்பட்ட தொலைத் தொடர்பூட்டல் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.
- தொலைத் தொடர்பு தொழிற்படுத்துநர்களின் ஆண்டு மொத்தப் புரள்வின் மீது 2 சதவீதமான செஸ் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.
- நீளத்தின் அடிபடையில் சிகரெட்கள் மீதான கலால் தீர்வை மேல் நோக்கி திருத்தப்பட்டது.

2011 சனவரி 07

- வெறியக் குடிவகைகள் (தேறல் குடிவகை தவிர்ந்த ஏனைய அனைத்து வகை குடிவகை) மீதான கலால் தீர்வையானது புறாவ் லீற்றரொன்றிற்கு ரூபா 50ஆல் அதிகரிக்கப்பட்டது.

2011 ஏப்பிறல் 01

- தனிநபர் வருமான வரியைக் கணிக்கும் போதான வரியற்ற படிகள் ரூபா 300,000 இலிருந்து ரூபா 500,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.
- தனிநபர் வருமான வரிக் கட்டமைப்பு பின்வருமாறு திருத்தப்பட்டது:

| | | |
|---|---|---|
| முதல் ரூபா 500,000 (வரி செலுத்தக் கூடிய வருமானம்) | - | 4 சதவீதம் |
| அடுத்த ரூபா 500,000 | - | 8 சதவீதம் |
| அடுத்த ரூபா 500,000 | - | 12 சதவீதம் |
| அடுத்த ரூபா 500,000 | - | 16 சதவீதம் |
| அடுத்த ரூபா 1,000,000 | - | 20 சதவீதம் |
| மீதி | - | 24 சதவீதம் |

- உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பிற்கான வரியற்ற படி ரூபா 500,000 இலிருந்து ரூபா 600,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.
- அரசதுறை ஊழியர்களுக்கான உழைக்கும்போதே செலுத்தும் வருமானவரி அறிமுகப்படுத்தப்பட்டது.
- தொழிலிருந்து கிடைக்கும் வருமானம் மட்டும் வருமான மூலமாக இருக்குமிடத்து, உழைக்கும்போதே செலுத்தும் வரித் திட்டத்தின் கீழ் (அரசாங்க, தனியார்துறை இரண்டும்) தொழில்நிலை வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட வரி இறுதி வரியாகக் கருதப்படும்.
- கம்பனிகள் அல்லது இலாப நோக்கமற்ற நிறுவனங்களுக்குப் பிரயோகிக்கத்தக்க கம்பனி வரி வீதமானது 30 சதவீதம், 33 1/3 சதவீதம் அல்லது 35 சதவீதத்திலிருந்து 28 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- கீழ்வருவனவற்றின் மீது பிரயோகிக்கத்தக்க வேறுபட்ட கம்பனி வருமான வரி வீதங்கள் வருமாறு:
  - கட்டுமானம், சுற்றுலா, தகைமைபெறும் ஏற்றுமதி இலாபங்கள் மற்றும் ரூபா 5 மில்லியனுக்குக் குறைவான இலாபத்தைக் கொண்ட நிறுவனங்களின் மீது பிரயோகிக்கத்தக்க சலுகை கம்பனி வரி வீதம் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
  - இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஆக்க உரிமையுடனான இலங்கை வியாபார அடையாளக் குறி மற்றும் 65 சதவீதத்திலும் அதிகமான உள்நாட்டு பெறுமதி சேர்க்கையைக் கொண்டிருக்கும் எந்தவொரு நபர் மீதும் பொருந்தத்தக்க அதிகபட்ச கம்பனி வருமான வரி 10 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

- மன்றங்கள் மற்றும் சங்கங்கள், களஞ்சியப்படுத்தலுக்கான வசதிகளின் தொழிற்படுத்தல் மற்றும் பேணல், உள்நாட்டு மென்பொருள் அபிவிருத்தி அல்லது தொழிலாளர் வழங்கல் மற்றும் கல்விசார் பணிகளிலிருந்தான வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வருமான வரி வீதம் 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.
- துணிகர முயற்சி மூலதனக் கம்பனிகள், பெற்றோலிய அகழ்வு ஆராய்ச்சி மற்றும் கேளிக்கை செய்வோர் அல்லது கலைஞர்கள் மீதான வரி வீதம் 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- பங்குடைமையொன்றின் பகிரக்கூடிய இலாபங்கள் மற்றும் ஏனைய வருமானம் மீதான வரி வீதம் 10 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 16ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு வேளாண்மை நடவடிக்கைகளினதும் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான அதிகபட்ச வரி வீதம் 10 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.
- வெறியக் குடிவகை அல்லது புகையிலை பொருட்களின் உற்பத்தி அல்லது இறக்குமதியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபர்கள் மீதும் பிரயோகிக்கத்தக்க வரி வீதம் 40 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
- மீன்பிடி, பயிரிடுகை மற்றும் வேளாண்மை விதைகளின் உற்பத்தி மற்றும் பயிர் வளர்ப்புத் துறைகள், 2011 ஏப்பிறல் 1 இல் ஆரம்பித்து ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு விலக்களிக்கப்பட்டன.
- ஆடை, தோல் உற்பத்திகள், காலணிகள் மற்றும் பைகளைத் தயாரிப்பதன் மூலம், முகாமைத்துவம், நிதி, விநியோகச் சங்கிலி மற்றும் பட்டியலிடல் தேவைகளுக்காக இலங்கையில் தலைமை அலுவலகங்களை அமைத்துள்ள வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு வழங்கல்களை மேற்கொள்வதன் மூலம் பெறப்படும் வெளிநாட்டு நாணய வருவாய்கள் வருமான வரியியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- சிறிலங்கன் எயார்லைன் லிமிடெட் மற்றும் மிகின் லங்கா (தனியார்) லிமிடெட் என்பன 10 வருட காலத்திற்கு அனைத்து மூலங்களிலிருந்தான கம்பனி வருமான வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டன. இவை அவற்றின் ஆண்டு மொத்த இலாபத்திலிருந்து 25 சதவீத பங்கிலாபத்தை அரசுக்கு கொடுப்பனவாகச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டிருக்கும்.
- இலங்கை மின் சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பன அனைத்து மூலங்களிலிருந்தான கம்பனி வருமான வரியிலிருந்தும் 5 வருட காலத்திற்கு விலக்களிக்கப்பட்டன. இவை அவற்றின் ஆண்டு மொத்த இலாபத்திலிருந்து 25 சதவீத பங்கிலாபத்தை அரசுக்குக் கொடுப்பனவாகச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டிருக்கும்.

- தனிப்பட்டவர்களின் வட்டி வருமானம் மீதான பிடித்து வைத்தல் வரி பின்வருமாறு திருத்தப்பட்டது:
  - மதிப்பிடப்படும் ஆண்டுக்கான மதிப்பிடக்கூடிய வருமானம் ரூபா 500,000 இனை விஞ்சாவிடின், வரிக் கழிப்பு மேற்கொள்ளப்பட மாட்டாது.
  - மதிப்பிடப்படும் ஆண்டுக்கான மதிப்பிடக்கூடிய வருமானம் ரூபா 500,000 இற்கு அதிகமாக ஆனால் ரூபா 1,500,000 இனை விஞ்சாவிடின், வரியானது மதிப்பிடப்படும் ஆண்டின் வட்டி வருமானத்தின் 2.5 சதவீதத்தில் கழிக்கப்படும்.
  - மதிப்பிடப்படும் வருமானம் ரூபா 1,500,000 இற்கு அதிகமெனில், மதிப்பிடப்படும் ஆண்டின் அத்தகைய வட்டி வருமானத்தில் 8 சதவீதத்தில் வரி கழிக்கப்படும்
- அறக்கொடை நிறுவனங்களின் வட்டி வருமானம் மீதான பிடித்து வைத்தல் வரி பின்வருமாறு திருத்தப்பட்டது:
  - மதிப்பிடப்படும் ஆண்டுக்கான மதிப்பிடக்கூடிய வருமானம் ரூபா 500,000 இனை விஞ்சாவிடின், வரிக் கழிப்பு மேற்கொள்ளப்பட மாட்டாது.
  - மதிப்பிடப்படும் வருமானம் ரூபா 500,000 இற்கு அதிகமெனில், மதிப்பிடப்படும் ஆண்டின் அத்தகைய வட்டி வருமானத்தில் 8 சதவீதத்தில் வரி கழிக்கப்படும்
- அரச பிணைகளுக்கு ஈடாக கம்பனி படுகடன் பிணையங்கள் மீதான பிடித்து வைத்தல் வரியை அறவிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- குறிப்பிட்ட கட்டணங்கள் மீதான பிடித்து வைத்தல் வரி நீக்கப்பட்டது.
- பொருளாதார பணிக் கட்டணச் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு விநியோகத்தர்களின் புரள்வு, லொத்தர் முகவர்கள், கூறு நம்பிக்கைகள் அல்லது சமவாய நிதியங்கள் மற்றும் அனைத்து விமானக் கம்பனிகள் மற்றும் கப்பற்படுத்துநர்களுக்கும் பொருளாதாரப் பணிக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- தற்போதிருக்கும் பொருளாதார பணிக் கட்டணத்தின் அடிமட்டம் ரூபா 7.5 மில்லியனிலிருந்து காலாண்டொன்றிற்கு ரூபா 25 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.
- தற்போது சமர்ப்பிக்க வேண்டியிருக்கிற பொருளாதார பணிக் கட்டணத்திற்கான காலாண்டு அடிப்படையிலான கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் ஏற்கனவேயிருக்கும் காலாண்டு கொடுப்பனவுகள் மாறாதிருக்கும் அதேவேளை வருடாந்தக் கூற்றுக்களாக மாற்றப்பட்டது.
- பொருளாதார பணிக்கட்டணத்தின் தற்போதைய ஐந்து வரிப்பிரிவு அமைப்பு வீதங்கள் (0.05, 0.1, 0.25, 0.5 மற்றும் 1 சதவீதம்) நான்கு வரிப்பிரிவு அமைப்புக்கு (0.1, 0.25, 0.5 மற்றும் 1 சதவீதம்) இலகுபடுத்தப்பட்டது.
- புற்று வரி நீக்கப்பட்டது.

- சமூகப் பொறுப்பாண்மை தீர்வை நீக்கப்பட்டது.
- தேசிய பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம், நிதி திட்டமிடல் அமைச்சினால் காலத்திற்குக் காலம் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளில் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 3 மில்லியன் அல்லது அதற்குச் சமனான இலங்கை ரூபாவிற்குக் குறையாத குறைந்தபட்ச மூலதனத்துடன் புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் எந்தவொரு கம்பனிக்கும் ஏழு ஆண்டுகள் வரி விடுமுறையை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- ரூபா 50 மில்லியனுக்குக் குறையாத முதலீட்டுடன் ஆரம்பிக்கப்படும் எந்தவொரு முன்னெடுப்பிலிருந்துமான இலாபங்கள் மற்றும் வருமானங்கள் மீதான வருமான வரி மூன்றாண்டுகளுக்கு விலக்களிக்கப்பட்டது.
- உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லிலிருந்து உற்பத்தி செய்யப்படும் அரிசி விற்பனைகளிலிருந்து எழும் புரள்வு மீது பொருந்தத்தக்க சலுகை தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியான 1.5 சதவீதம் 2 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
- புடவை அனுமதிப்பங்கு சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அபிவிருத்திச்சபை என்பவற்றினூடாக தொழிற்படுத்தப்பட்ட தற்போதைய பெறுமதிசேர் வரித் திட்டத்தின் தற்போதைய இடைநிறுத்தம் உள்நாட்டு இறைவரியின் ஆணையாளர் நாயகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. மேற்படி திட்டத்தின் கீழ் உள்ளடங்காத வழங்கல்களைப் பொறுத்தவரை இப்புதிய இடைநிறுத்தல் திட்டமானது பின்வரும் வகைகளுக்காக உள்நாட்டு இறைவரியின் ஆணையாளர் நாயகத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படும் :
  - ஏற்றுமதியாளர்களக்கு பொருட்களை விநியோகிக்கும் வழங்குநர்கள்
  - ஏற்றுமதியாளர்களுக்கு பெறுமதி கூட்டல் பணிகளை வழங்கும் வழங்குனர்கள்
  - சிறப்பு வாய்ந்த செயற்றிட்டங்களுக்கான வழங்குநர்கள்
  - பெறுமதிசேர் வரியின் பிரிவு 22(7)இன் கீழ் பதிவு செய்த நபர்களுக்கான வழங்குநர்கள்.

2011 ஏப்பிறல் 24
- கலப்பு ஊர்திகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் 1600 சி.சி க்கு குறைவான பெற்றோல் உந்து ஊர்திகள் என்பனவற்றின் இறக்குமதி மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

2011 ஒத்தோபர் 20
- நீளத்தின் அடிபடையில் சிகரெட்கள் மீதான கலால் தீர்வை மேல் நோக்கி திருத்தப்பட்டது.

2011 ஒத்தோபர் 25
- குடிவகை (தேறல் குடிவகை தவிர்ந்த) மற்றும் தேறல் குடிவகை மீதான கலால் தீர்வை முறையே பூறூப் லீட்டரொன்றிற்கு ரூ. 60 மற்றும் தொகை லீட்டரொன்றிற்கு ரூ. 5 ஆக அதிகரிக்கப்பட்டது.

2011 நவெம்பர் 22
- உள்ளூர் மூலப்பொருட்களிலிருந்து அல்லது உள்ளூரில் தயாரிக்கப்படும் வெறியக் குடிவகை புறூவ் லீற்றரொன்றுக்கு ரூபா 100 என்ற குறைந்த கலால் தீர்வைக்குட்பட்டிருக்கும்.
- சொகுசு (2500 சி.சி க்கு மேற்பட்ட டீசல் உந்து ஊர்திகள், மற்றும் 2000 சி.சி க்கு மேற்பட்ட பெற்றோல் உந்து ஊர்திகள்), அரைச் சொகுசு (2201 சி.சி இலிருந்து 2500 சி.சி க்கு இடைப்பட்ட டீசல் உந்து ஊர்திகள், 2201 சி.சி க்கு மேற்பட்ட ஜீப் வண்டிகள், 1801 சி.சி க்கும் 2000 சி.சிக்குமிடைப்பட்ட பெற்றோல் உந்து ஊர்திகள் மற்றும் 1801 சி.சி க்கு மேற்பட்ட ஜீப் வண்டிகள்) மற்றும் இரட்டை நோக்க (2200 சி.சிக்கு மேற்பட்ட டீசல் வாடகைச் சீருந்து மற்றும் 1800 சி.சிக்கு மேற்பட்ட பெற்றோல் வாடகைச் சீருந்து) வாகனங்கள் மீதான உந்து ஊர்தி வரிகள் அதிகரிக்கப்பட்டன.

2011 நவெம்பர் 24
- ஊர்திகளின் பதிவின் போது செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் மீதான பிடித்து வைத்தல் வரியானது ஊர்தி பதிவுக் கட்டணங்களுடன் சேர்க்கப்பட்டதுடன் உந்து ஈருருளிகள், உந்து முச்சக்கர ஊர்திகள், உந்து முச்சக்கர சிற்றூர்திகள், உந்து ஊர்திகள், முதன்மை இயக்கிகள், கவைகோல் பழுஏற்றிகள் மற்றும் இரட்டை நோக்க ஊர்திகள் என்பனவற்றின் மீது பொருந்தத்தக்க ஊர்திப் பதிவுக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன.
- உந்து ஈருருளிகள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான வருடாந்த வருமான உரிமக் கட்டணம் ரூபா 150 இனால் அதிகரிக்கப்பட்டதுடன் ஏனைய ஊர்தி வகைகளுக்கு ரூபா 500 இனால் அதிகரிக்கப்பட்டது.

2012 சனவரி 01
- பின்வருவனவற்றின் வழங்கல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
  - உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட நீர்மின் வலு பொறி மற்றும் சாதனங்கள், உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் சுற்றுலா விடுதிகள் மற்றும் விமானங்கள், தகரத்திலடைக்கபட்ட மீன், மின் வலுவுக்கான சுழலி, இறக்குமதிகளைப் பிரதியீடு செய்யும் அடையாளங்காணப்பட்ட அரச நிறுவனங்களுக்கான குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள்
  - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள், வர்த்தகத் திணைக்களம் மற்றும் ஓவியர்களினால் வரையப்பட்ட ஓவியங்கள்
  - வட்டி, பங்கிலாம் அல்லது படுகடன் சாதனங்களில் வியாபாரம் செய்தல் என்பனவற்றிலிருந்தான கூறு நம்பிக்கை அல்லது பரஸ்பர நிதியத்துக்குரித்தான பெறுமதி சேர்ப்புக்கள்
- ஏற்றுமதியாளர்களுக்கான பொருட்களின் மொத்த அல்லது சில்லறை விற்பனை, உடன் பால், பச்சிலை, கறுவா, இறப்பர் (லேட்டக்ஸ், கிரேப் அல்லது தட்டை இறப்பர்), எரிபொருள் நிரப்பு நிலையங்களிலான பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெய், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட மண் கூரை ஓடுகளின் விற்பனை மற்றும் உற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்படும் மட்பாண்ட உற்பத்திகள், ஓவியர்களினால் வரையப்பட்ட ஓவியங்களின் விற்பனை என்பன தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

| | |
|---|---|
| | - வெளிச்செல்லும் உள்நாட்டு அழைப்புக்கள் மீதான தொலைத்தொடர்பூட்டல் தீர்வையானது நிமிடமொன்றுக்கு ரூபா 2 இலிருந்து நிமிடமொன்றுக்கு ரூபா 3 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - உள்வரும் வெளிநாட்டு அழைப்புக்களுக்கான வீதமானது நிமிடமொன்றுக்கு ஐ.அ.டொலர் 0.07 இலிருந்து ஐ.அ.டொலர் 0.09 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2012 மாச்சு 31 | - உந்து ஊர்திகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்து ஈருருளிகளின் இறக்குமதி மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது. |
| | - குடிவகை (தேறல் குடிவகை தவிர்ந்த) மற்றும் தேறல் குடிவகை மீதான கலால் தீர்வை முறையே பூறுப் லீட்டரொன்றிற்கு ரூ. 60 மற்றும் தொகை லீட்டரொன்றிற்கு ரூ. 5 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | - நீளத்தின் அடிபடையில் சிகரெட்கள் மீதான கலால் தீர்வை மேல் நோக்கி திருத்தப்பட்டது. |

**அடுத்து வருவது**

| | |
|---|---|
| 2012 ஏப்பிறல் 01 | - தயாரிப்பு பொருட்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வருமான வரியின் தற்போதைய விலக்களிப்பை, வேளாண்மை மற்றும் வேளாண் பதனிடல், விலங்கு வளர்ப்பு மற்றும் பதனிடல், மீன்பிடி மற்றும் மீன் பதனிடல், தகவல் தொழினுட்பம், வணிக அல்லது அறிவு செயன்முறையை வெளியாருக்குக் கொடுத்தல், நலக்கவனிப்பு, கல்வி, அழகுப்பராமரிப்பு, குளிர் அறை மற்றும் களஞ்சியம், சுற்றுலா, கலை வேலைப்பாடு உள்ளிட்ட ஆக்கப்படைப்புக்கள், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நிலையங்கள் போன்றவற்றில் ஈடுபடும் தொழில்முயற்சிகளுக்கும் அவற்றின் வணிகத்தின் அளவு மற்றும் முதலீட்டின் அடிப்படையில் விரிவுபடுத்துதல். |
| | - வியாபாரத்தினை விரிவாக்குவதற்காக ஏற்கனவேயுள்ள தொழில் முயற்சிகளினால் 2015 மாச்சிற்கு முன்னதாக மேற்கொள்ளப்படும் ஒப்பந்த ரீதியான முதலீடுகள் (ரூ.50 மில்லியனுக்கும் குறையாதவை), ஒவ்வோராண்டின் மதிப்பீட்டினதும் முதலீட்டில் உயர்ந்தபட்சம் 25 சதவீதம் என்ற நிபந்தனைக்குட்பட்டு முதலீடுகள் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து 4 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குள் வருகின்ற தொழில்முயற்சியின் மதிப்பிடத்தக்க வருமானத்திலிருந்து கழிக்கத்தக்க தகைமை பெறும் கொடுப்பனவு. |
| | - சீமெந்து, உருக்கு, மருந்தாக்கற் பொருட்கள், துணி வகை மற்றும் பால்மா என்பனவற்றில் முதலீடு மேற்கொண்ட புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு 5 ஆண்டு வரி விடுப்பும் இத்துறைகளில் ஏற்கனவே முதலீடு செய்துள்ள தொழில்முயற்சிகளுக்கு 5 ஆண்டுகளுக்கு சலுகை அடிப்படையிலான வரிக் கொடுப்பனவுக்கு தகுதி பெறுவர். |
| | - செயற்றிட்ட நடைமுறைக் காலத்தில் தொழில்முயற்சிகளினால் இறக்குமதி செய்யப்படும் பொறி, இயந்திரம் அல்லது சாதனத்தின் மீதான பெறுமதிசேர் வரி, சுங்கத்தீர்வை, செஸ் தீர்வை மற்றும் துறைமுக மற்றும் வானூர்தி நிலைய தீர்வையை பிற்போடுதல். |
| | - பொருத்தமான வரி சட்ட ஏற்பாடுகளின் தொடர்பான நடைமுறையின் நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, வரி விலக்குகளுக்குத் தகுதியான முதலீட்டாளர்களுக்கான முன்னேற்றமடைந்த விதிப் பொறிமுறையை அறிமுகப்படுத்துதல். |
| | - இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை என்பனவற்றின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு (பங்கிலாபங்கள் மற்றும் வட்டி தவிர்ந்த) வருமான வரியிலிருந்து விலக்களித்தல். |
| | - இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்டு வங்கியொன்றினூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்ட வேத்துரிமைகள், கூறுநம்பிக்கைகள் அல்லது சமவாய கூறு ஒன்றின் மீட்பிலிருந்து கிடைத்த இலாபம் அல்லது வருமானம், இலங்கையிலுள்ள எவரேனும் ஆள் அல்லது பங்குடமைக்கு வழங்கப்பட்ட கடனுக்கு இலங்கைக்கு வெளியிலுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடமைக்கு வழங்கப்படும் ஒன்று சேர்ந்த வட்டி, ஏதேனும் விளையாட்டு மைதானம், விளையாட்டரங்கு அல்லது விளையாட்டுக் கட்டடத்தொகுதியின் நிருவாகத்திலிருந்து கிடைக்கும் இலாபம் மற்றும் வருமானம் மற்றும் பயிற்சி நோக்கங்களுக்காக இலங்கைக்கு கூட்டி வரப்பட்ட இலங்கையரல்லாத தனிப்பட்ட விளையாட்டுப் பயிற்சியாளரின் இலாபம் மற்றும் வருமானம் என்பன வருமான வரியிலிருந்து விலக்கப்பட்டன. |
| | - அபிவிருத்தி வங்கித்தொழிலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் புதிதாக நிறுவப்பட்ட வங்கிக்கிளையிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு 24 சதவீதமான குறைந்த வீதத்தில் வரியிடுதல். |
| | - கம்பனி தவிர்ந்த தனிநபர் ஒருவரினால் ஆராய்ச்சி அல்லது அபிவிருத்தியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீது அதிகபட்சம் 16 சதவீதம் என்ற வீதத்தில் வரி வீதத்தைக் குறைப்பதுடன் கம்பனிகளைப் பொறுத்தவரை 20 சதவீதத்திற்குக் குறைத்தல். |
| | - பெறுமதிகூட்டப்பட்ட அடிப்படையில் இலங்கையர் வர்த்தக அடையாளத்துடன் சுத்தமான இலங்கைத் தேயிலையை (சிலோன் தேயிலை) ஏற்றுமதி செய்கின்ற நோக்கத்திற்காக கூட்டுத் தொழில் முயற்சியொன்றினை நிறுவியுள்ள தேயிலைப் பயிர் செய்வோர் அத்துடன் தயாரிப்பாளர்களுக்கு, இந்நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட தேயிலையின் அளவின் அடிப்படையில் தயாரிப்பு வருமானத்தின் மீது 12 சதவீத வரியினை நீடித்தல். |

- தனிநபர் ஒருவரின் அல்லது பங்குடமையொன்றின் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீது பிரயோகிக்கத்தக்க அதிகபட்ச வரி வீதத்தை 12 சதவீதத்திற்கு குறைத்தல்.
- நலக்கவனிப்பு பணிகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீது பிரயோகிக்கத்தக்க வரி வீதத்தை அதிகபட்சம் 12 சதவீதத்திற்குக் குறைத்தல்.
- ஏதேனும் உயர் தொழில்நுட்பப் பொறித்தொகுதி, பொறி அல்லது கருவி, ஊழியரொருவரினால் பயன்படுத்தப்படும் ஏதேனும் உந்து ஊர்திகள் தொடர்பாக ஊழியரொருவரினால் உறப்படும் பயணச் செலவுகள், வடிவமைப்பு அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக உறப்பட்ட பயணச் செலவுகள், சாதன அபிவிருத்தி அல்லது சாதனம் பற்றிய புத்தம் புதிய விடயங்கள் மற்றும் ஏதேனும் விளையாட்டு மைதானம் விளையாட்டரங்கு அல்லது விளையாட்டு கட்டடத்தொகுதி என்பன தொடர்பாக எவரேனும் ஆளினால் உறப்பட்ட செலவுகள் தொடர்பான அனுமதிக்கத்தக்க செலவுகள், இலாபம் மற்றும் வருமானத்தினைக் கண்டறியும் வேளையில் கழிக்கப்படும்.
- தையல் நூல் மற்றும் தாவர நாரினாலான நூல் தவிர்ந்த ஏனைய அனைத்து நூல்களுக்கும் அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களித்தல்.
- வருமான வரிக்குட்பட்ட இலாபங்களையுடைய எந்தவொரு வணிகத்தினதும் புரள்வின் மீதான பொருளாதாரப் பணிக்கட்டணத்துக்கான பொறுப்பினை நீக்குவதன் மூலம் பொருளாதாரப் பணிக்கட்டணத்துக்கான விதிக்கக்கூடிய தன்மையினை இலகுபடுத்துதல்.
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மண் கூரை ஓடுகள் மற்றும் உற்பத்தியாளரால் செய்யப்படும் மட்பாண்ட உற்பத்திகளின் விற்பனைக்கு பொருளாதாரப் பணிக்கட்டணத்திலிருந்து விலக்களித்தல்.
- பொருளாதார பணிக் கட்டணத்தின் பிடித்து வைத்தல் தொகையை காலாண்டொன்றுக்கு ரூபா 25 மில்லியனிலிருந்து ரூபா 50 மில்லியனுக்கு விரிவுபடுத்தல்.

**அரச செலவினம்**

2011 சனவரி 01
- அனைத்து அரச பணியாளர்களுக்கும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தின் 5 சதவீதத்திற்குச் சமமான சிறப்புப் படியொன்று வழங்கப்பட்டது.
- அரச துறையிலுள்ள உயர் தரமல்லா வகுப்பைச் சேர்ந்த ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படியானது மாதமொன்றுக்கு ரூபா 600 இனால் ரூபா 5,850இற்கு அதிகரிக்கப்பட்டது.
- ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 300 இனால் ரூ.2,675இற்கு அதிகரிக்கப்பட்டது.
- பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட கல்விசார்படி, நிதிப் பணிகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் வரும் நீதிமன்றங்களின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட தனிப்பட்ட படிகள் மற்றும் மருத்துவர்களுக்கு செலுத்தப்பட்ட தேவைக்கு அழைக்கும் படி என்பன 25 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.
- ஆராய்ச்சியை முன்னெடுக்கும் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கும், ஆராய்ச்சி நிறுவனங்களின் உயர்தர வகுப்பு அலுவலர்களுக்கும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமனான மாதாந்த ஆராய்ச்சிப் படியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2011 மே 07
- அனைத்துப் பயிர்களுக்கும் வளமாக்கி உதவுதொகை நீடிக்கப்பட்டது. இதன்படி, 50 கிலோ கிறாம் கொண்ட கலக்கப்படாத வளமாக்கிப் பொதியொன்று ரூபா 1,200 என்ற உதவுதொகை விலையில் விற்கப்பட்டதுடன் 50 கிலோ கிறாம் கொண்ட கலக்கப்பட்ட வளமாக்கியானது ரூபா 1,300 என்ற உதவுதொகை விலையில் விற்கப்பட்டது.

2011 யூலை 01
- அரச துறையிலுள்ள உயர்தர வகுப்பு ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 இனால் ரூபா 5,850இற்கு அதிகரிக்கப்பட்டது.
- 2004 சனவரி 01 இற்கு முன் ஓய்வூதியம் பெற்றவர்களது மாதாந்த ஓய்வூதியம் ரூபா 750இனால் அதிகரிக்கப்பட்ட அதே வேளையில் 2004 சனவரி 01 இற்கும் 2005 திசெம்பர் 31இற்கும் இடையில் ஓய்வூதியம் பெற்ற ஓய்வூதியர்களது மாதாந்த ஓய்வூதியம் ரூபா 250இனால் அதிகரிக்கப்பட்டது.

2012 சனவரி 01
- அனைத்து அரச பணியாளர்களுக்கும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தின் 15 சதவீதத்திற்குச் சமமான சிறப்புப் படியொன்று வழங்கப்பட்டது.
- கிராம சேவையாளர்களின் போக்குவரத்துச் செலவு மற்றும் அலுவலகப் படி என்பன அதிகரிக்கப்பட்டன.
- 2003 திசெம்பர் 31 இற்கு முன் ஓய்வூதியம் பெற்றவர்களது மாதாந்த ஓய்வூதியம் ரூபா 1000 இனால் அதிகரிக்கப்பட்ட அதே வேளையில் 2004 சனவரி 01 இற்கும் 2005 திசெம்பர் 31இற்கும் இடையில் ஓய்வூதியம் பெற்ற ஓய்வூதியர்களது மாதாந்த ஓய்வூதியம் ரூபா 500 இனால் அதிகரிக்கப்பட்டது.

2012 பெப்புரவரி 13
- மண்ணெண்ணெய் மீன்பிடிப் படகுகள் மற்றும் டீசல் மீன்பிடிப் படகுகள் என்பனவற்றுக்கு முறையே லீற்றறொன்றுக்கு ரூபா 25 மற்றும் லீற்றரொன்றுக்கு ரூபா 12 ஐக் கொண்ட உதவுதொகை வழங்கப்பட்டது.

2012 பெப்புரவரி 15
- மின்வசதியில்லாத அனைத்து வீட்டுத்துறைக்கும் மாதமொன்றுக்கு ரூபா 200 ஐக் கொண்ட மண்ணெண்ணெய் உதவுதொகை வழங்கப்பட்டது.

**படுகடன் முகாமைத்துவம்**

| | |
|---|---|
| 2011 யூலை 27 | - ஐ.அ.டொலர்கள் 1 பில்லியன் பெறுமதியான நான்காவது நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கல் வழங்கப்பட்டது |
| 2011 ஓகத்து 30 | - ரூபா 18,832 மில்லியன் பெறுமதியான அழைக்கக்கூடிய ரூபாக் கடன்களை முன்னதாக இளைப்பாற்றுதல், இதன்படி ரூபாக் கடன்கள் மீட்கப்பட்டன. |

## நாணயத்துறை

| | |
|---|---|
| 2011 சனவரி 11 | - மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதம் 7.00 சதவீதத்துக்கு 25 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டிருக்கையில் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் 8.50 சதவீதத்துக்கு 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டது |
| 2011 ஏப்பிறல் 29 | - வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீது பிரயோகிக்கத்தக்க நியதிச்சட்ட ஒதுக்கு விகிதம் 8 சதவீதத்துக்கும் 1 சதவீதப் புள்ளியால் அதிகரிக்கப்பட்டது. |
| 2012 பெப்புருவரி 03 | - மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் முறையே 7.50 சதவீதத்துக்கும் 9.00 சதவீதத்துக்கும் 1 சதவிதம் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டது. |
| 2015 மாச்சு 15 | - மத்திய வங்கி நேர்மாற்று ஏலங்களை நடாத்தும் நாட்களில் மீள்கொள்வனவு துணைநில் வசதிக்கான நாளாந்தம் பெறும் வசதி பங்கேற்கும் நிறுவனமொன்றுக்கான ரூ.100 மில்லியன்வரை மட்டுப்படுத்தப்பட்டது. |

## நிதியியல்துறை

**வங்கித்தொழில்**

| | |
|---|---|
| 2011 சனவரி 11 | - பங்குப் பிணைப்படுத்தல் வர்த்தகத்தின் மூலம் வெளிப்படும் சொத்து திடீர் விலைக் குமிழ்கள் மற்றும் விலைகளின் தளம்பல்களிலிருந்து எழக்கூடிய வரையறைகளை அறிமுகப்படுத்துவதற்கு இடர்நேர்வைக் குறைப்பதற்குரிய பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களைக் கடைப்பிடிக்கும்படி அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் தேவைப்படுத்தப்பட்டனர். |
| 2011 சனவரி 24 | - இஸ்லாமிய வழிமுறைகளை பின்பற்றி செயல்படும் இலங்கையின் முதல் வர்த்தக வங்கியாகத் தொழிற்படுவதற்கு அமானா பாங்க் லிமிட்டெட் இற்கு வர்த்தக வங்கித் தொழில் உரிமம் வழங்கப்பட்டது. |
| 2011 பெப்புருவரி 18 | - சுனாமிக்குப் பின்னரான கரையோர புனரமைப்பு மற்றும் மூலவள முகாமைத:தவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்வரும் துணைச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடனின் அளவு ரூ.80,000 இலிருந்து ரூ.1 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2011 மாச்சு 09 | - செல்லிடத் தொலைபேசிக்கான கொடுப்பனவு முறைமையை ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் கண்காணிக்கும் நோக்குடன் பின்வரும் செல்லிடத் தொலைபேசி வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.<br>- 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கியினால் வழிநடத்தப்படும் செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவுப் பணிகளுக்கான செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு வழிகாட்டல்கள்.<br>- கட்டுக்காப்பாளர் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவுப் பணிகளுக்கான 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு வழிகாட்டல்கள். |
| 2011 மாச்சு 28 | - உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்/வாடிக்கையாளரை நெருக்கமாகக் கண்காணித்தல் விதிகளின் மீது 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது. |
| 2011 ஏப்பிறல் 01 | - சௌபாக்கிய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட துணைக்கடன்கள் மீதான ஆகக்கூடிய எல்லை அதிகரிக்கப்பட்டது. சௌபாக்கிய கடன் திட்டத்தின்கீழ் மீள் நிதி மீதான வட்டிவீதம் ஆண்டொன்றுக்கு 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதத:துக்கு குறைக்கப்பட்டிருக்கையில் துணைக் கடன்கள் மீதான வட்டிவீதங்கள் ஆண்டொன்றுக்கு 10 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்துக்கு குறைக்கப்பட்டன. |
| 2011 ஏப்பிறல் 28 | - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் பங்குச் சந்தைக்கான மொத்த வெளிப்படுத்துகை மற்றும் ஆரம்ப பொது வழங்கலுக்கான உத்தரவாதங்களின் மீது வரையறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. |
| 2011 ஏப்பிறல் 29 | - 2011இற்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வரிச் சேமிப்புக்களை பயன்படுத்தி முதலீட்டு நிதியக் கணக்கினை நிறுவுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| 2011 யூன் 06 | - உரிமம் பெற்ற வங்கிகள் அவற்றின் வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கும் சாதனங்கள் மீதான வட்டி வீதங்கள், வெளிநாட்டு செலாவணி வீதங்கள் மீதான வெளிப்படுத்துகைகளை விரிவாக்குமாறும், கட்டணங்கள், தரகுகள் மற்றும் ஏனைய பணிக்கட்டணங்களை அவற்றின் அனைத்து வங்கிக்கிளைகள் அத்துடன் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களில் காட்சிப்படுத்துவதுடன் அவற்றை வங்கிகளின் இணையத்தளங்களில் பிரசுரிக்குமாறும் தேவைப்படுத்தப்பட்டன. |
| 2011 யூலை 22 | - தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுடன் தொடர்புடைய இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் ஆளுகை நடைமுறைகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் மூலதனத்தினைப் பேணுவதற்கு வங்கிகளை இயலச் செய்வதற்காக, பாசல் ஐஐ இன் தூண் 1இன் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் பற்றிய முன்கூட்டிய அணுகுமுறையொன்றிற்கு நகர்வது பற்றிய வெளிப்படுத்துகை வரைவு விடுக்கப்பட்டது. |

2011 ஓகத்து 09 - 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்/வாடிக்கையாளரை நெருக்கமாகக் கண்காணித்தல் விதிகள் தொடர்பான இல. 1699/10 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கான திருத்தங்கள் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் வழங்கப்பட்டன.

2011 ஓகத்து 15 - உள்நாட்டு மோதல்களின்போது பாதிக்கப்பட்ட வீடுகளைத் திருத்துவதற்காக அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பங்கேற்புடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2011 செத்தெம்பர் 29 - 2012 இலிருந்து 2014 ஆண்டு காலப்பகுதிக்கான அனைத்து வங்கிகளினதும் உரிமக் கட்டணம் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன :

| முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்கள் | உரிமக் கட்டணம் |
|---|---|
| ரூபா 200 பில்லியனுக்கு மேல் | ரூபா 20 மில்லியன் |
| ரூபா 125 பில்லியனிலிருந்து ரூபா 200 பில்லியன் வரை | ரூபா 15 மில்லியன் |
| ரூபா 75 பில்லியனிலிருந்து ரூபா 125 பில்லியன் வரை | ரூபா 10 மில்லியன் |
| ரூபா 25 பில்லியனிலிருந்து ரூபா 75 பில்லியன் வரை | ரூபா 5 மில்லியன் |
| ரூபா 25 பில்லியனுக்குக் கீழ் | ரூபா 2 மில்லியன் |

2011 ஒத்தோபர் 03 - இந்தியாவின் அக்ஷிஷ் பாங்க் லிமிடெட்டிற்கு இலங்கையில் வங்கிக் கிளையை தாபிப்பதற்கான வங்கித்தொழில் உரிமம் வழங்கப்பட்டது.

2011 ஒத்தோபர் 05 - வழங்கப்பட்டதிகதியிலிருந்து 6 மாதங்களினுள் நடைமுறைப்படுத்தப்படும் சாசனத்துடன் இணைந்து செல்லும் விதத்தில் வங்கிகள் "ஒழுகக் கோவையை" பின்பற்றுமாறு வங்கிகளை வேண்டிக் கொள்ளும் உரிமம் பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் தொடர்பான பணிப்புரை வழங்கப்பட்டது.

- வழங்கப்பட்டு 6 மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்த இருக்கும் ஒன்றிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ வரைச்சட்டம் மீதான பணிப்புரை ஒன்று உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டது.

2011 ஒத்தோபர் 27 - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் கூறுகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் கூறுகளில் வெளிநாட்டு நாணயமாற்று கொடுக்கல் வாங்கல்களுக்கான குறித்துரைக்கப்பட்ட நாணயமாக சீன ரென்மின்பீ குறித்துரைக்கப்பட்டது.

2011 ஒத்தோபர் 31 - சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான தகுதிப் பிரமாணமானது மூலதனப் போதுமை நோக்கங்களுக்காக விரிவுபடுத்தப்பட்டது.

- வரிச் சேமிப்புக்களை வழிப்படுத்துகின்ற சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான தகுதிப் பிரமாணமுட்பட முதலீட்டு நிதியக் கணக்கின் கீழான வழங்கல் பரப்புக்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன.

2011 நவெம்பர் 08 - பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதியின் கீழ் வரும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலுள்ள வதிவற்ற ஒருவரின் ஏதேனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்கான அனைத்து நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களின் மீதும் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாணயத்தில் பெறப்படும் உள்முகப் பணவனுப்பல்களுக்கும் நிதியமாற்றல்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

2011 நவெம்பர் 23 - இலங்கை கணக்கீட்டு நியமம் 32, 39 மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 7 இன் கீழ் வங்கிகள் சட்ட ரீதியாக மத்திய வங்கிக்கு அறிக்கையிடுவதன் மீதான வரைவு வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.

2011 திசெம்பர் 16 - பங்குகள் மீதான கடன் வசதி வியாபாரத்தின் மீதிருந்த வரையறை நீக்கப்பட்டதுடன் ஒவ்வொரு வங்கியினதும் பணிப்பாளர் சபையானது, அவர்களின் தாங்கக்கூடிய அளவுகளின் அடிப்படையில் உள்ளக வரையறைகளை நிர்ணயிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டன.

2012 சனவரி 02 - வடக்கின் எழுச்சி – சுழலும் நிதியம் கட்டம் II மற்றும் கிழக்கு மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகளை மீளக்கட்டியெழுப்புதல் - சுழலும் நிதியம் கட்டம் - II கடன் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2012 மாச்சு 02 - வெளிநாட்டுச் செலாவணியிலான நாளாந்த தொழிற்படும் நிலுவையுடன் தொடர்பான வர்த்தக வங்கிகளின் நாளாந்த தேறிய திறந்த நிலைமைகள் மீதான வரையறைகள், ஆகக்குறைந்தது ஐ.அ.டொலர் 1 மில்லியன் என்ற நிபந்தனைக்குட்பட்டு தற்போதுள்ள, வெளிப்படுத்தல் வரையறையின் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைக்கப்பட்டன.

2012 மாச்சு 12 - 2012இல் உரிமம் பெற்ற வங்கிகள் அவற்றின் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சியை 18 சதவீதம் அல்லது ரூ.800 மில்லியனுக்கு இதில் எதுகூடியதோ அதற்கு மட்டுப்படுத்தி கொடுகடனின் மேலதிக வளர்ச்சிக்கு நிதியிடுவதற்கு வெளிநாடுகளிலிருந்து திரட்டும் வங்கிகள் 23 சதவிதும் அல்லது 1 பில்லியன் இதி எது உயர்ந்ததோ அதை அனுமதிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டன.

**அடுத்து வருவது**

- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தத்திற்குத் தேவைப்டும் ஒழுங்குவிதிகளை விடுத்தல்.
- பாசெல் II மூலதன போதுமைக்கான தரங்களின் தூண் 2ஐ நடைமுறைப்படுத்தல்.
- பாசெல் III உடன் ஒத்தான பொருத்தமான திருத்தங்களை அறிமுகப்படுத்துவது.

**ஏனைய நிதியியல் நிறுவனங்கள்**

2011 மாச்சு 30 - சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பணிப்பாளர் சபையின் மாற்றம், வியாபாரத்தை விற்றல், துணைக் கம்பனிகளை தாபித்தல், வழங்கப்பட்ட மூலதனத்திலான மாற்றங்கள் மற்றும் எந்தவொரு அமைப்பியல் மாற்றங்களை மேற்கொள்ளும்போதும் மத்திய வங்கியின் முன் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தேவைப்படுத்தும் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

- இடர்நேர்வுகளை காத்திரமான விதத்தில் குறைப்பதற்காகவும் நிதியியல் முறைமையின் உறுதித் தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும் 2011 யூலை 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் அவற்றின் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் தொடர்பில் 5 சதவீதத்திற்குக் குறையாத 10 சதவீத மூலதனப் போதுமாந் தன்மை விகிதத்தைப் பேண வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டன.

2011 மே 12 - 2011 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு முதலீட்டு நிதியக் கணக்கின் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் குத்தகைக்கு விடும் மற்றும் நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டன.

2011 மே 20 - 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் தொடர்பில் சுற்றறிக்கை 02/11 அனைத்துப்பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கும் வழங்கப்பட்டது.

2011 யூன் 22 - அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளும் எந்தவொரு வேலை நாளின் முடிவின்போதும் பங்குடைமையாளர்களுக்கான பொறுப்புக்கள் நீங்கலாக, குறைந்தபட்சம் மொத்தப் பொறுப்புக்களிலும் ஐந்தொகைக்கும் புறம்பான விடயங்களிலும் 2012 சனவரி 01 இலிருந்து 5 சதவீதத்திற்குக் குறையாத ஒரு தொகையினையும் 2013 சனவரி 01 இலிருந்து 1 சதவீதத்திற்குக் குறையாத தொகையினையும் ஆகக் குறைந்த திரவச் சொத்துக்களாகப் பேணி வருதல் வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டன.

2011 ஓகத்து 02 - எதிர்பார்க்கப்படும் அதிகரித்த வியாபார கேள்விக்காகவும், இடர்நேர்வுகளை வினைத்திறனுடன் முகாமை செய்வதற்காகவும் அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காகவும் அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் அவற்றின் மைய மூலதனத்தை 2013 சனவரி 01 அளவில் ரூபா 300 மில்லியனுக்கும், மேலும் 2015 சனவரி 01 அளவில் ரூபா 400 பில்லியனுக்கும் அதிகரிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டன.

2011 செத்தெம்பர் 05 - 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை நாணயச் சபையால் விடுக்கப்பட்டது.

- 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பனவற்றை மதிப்பிடுதல்) பணிப்புரை நாணயச்சபையால் விடுக்கப்பட்டது.

2011 செத்தெம்பர் 13 - அனைத்து உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் எந்தவொரு எதிர்கால தொகுதிக்கடன் வழங்கல்களையும் பட்டியலிடுவதற்கு கவனத்திலெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

2011 நவெம்பர் 09 - 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தை நீக்குவதோடு அதைப் பதிலீடு செய்யும் புதிய சட்டம் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**ஏனையவை**

2011 சனவரி 01 - பங்கு கொடுக்கல் வாங்கல் தீர்வையானது 0.2 சதவீதத்திலிருந்து 0.3 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2011 பெப்புரவரி 04 - இலங்கை மத்திய வங்கி “அபிவிருத்தி சுபீட்சம் மற்றும் இலங்கையின் நடனக் கலைஞர்கள்” என்ற தொனிப் பொருளில் சுற்றோட்டத்திற்கான புதிய நாணயத்தாள் தொடர்களை வெளியிட்டது. இது வங்கியின் 11ஆவது நாணயத்தாள் தொடராக இருப்பதுடன் ரூபா.20, ரூபா. 50, ரூபா. 100, ரூபா, 500, ரூபா, 1,000 மற்றும் ரூபா. 5,000 ஆகிய பெறுமானங்களை உள்ளடக்கியிருக்கும்.

2011 பெப்புரவரி 11 - 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க காப்புறுதித் தொழிலின் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. முக்கிய அம்சங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

- நீண்டகால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி என்பனவற்றை தனியான கம்பனிகளாக வேறுபடுத்தல், தற்போது ஒன்றிணைந்திருக்கும் காப்புறுதிக் கம்பனிகள் நான்கு வருடங்களுக்குள் இதற்கு இணங்கியொழுகுமாறு தேவைப்படுத்தப்படும்.
- பட்டியலிடப்படாத அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் ஐந்து ஆண்டுகளுக்குள் பட்டியலிடப்பட வேண்டும்.
- காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் ஏனைய ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கு பொது மற்றும் சிறப்பான பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம் இலங்கைக் காப்புறுதிச் சபைக்கு அளிக்கப்பட்டது.
- ஏற்கனவேயிருக்கும் காப்புறுதிக் கம்பனிகளின் மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரிப்பதற்கும் நிறுவன ரீதியான முகவர்கள் மற்றும் இழப்பு முறைப்படுத்துநர்களை பதிவு செய்வதற்கும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்குமான அதிகாரம் இலங்கை காப்புறுதி சபைக்களிக்கப்பட்டது.

- காப்புறுதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபைக்கான பொருத்தம் மற்றும் தகுதிக்கான பிரமாணம்.
- தேசிய காப்புறுதி நம்பிக்கை சபை, இலங்கைக் காப்புறுதிச் சபையின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்படும்

2011 மாச்சு 01 - பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட ஒரு பணிப்பின்படி, கடன் வசதியொன்றாக வழங்கப்பட்ட ஒன்றுசேர்ந்த கடன்களுக்கெதிரான கடன் வசதி அளிப்பவர்களின் வெளிப்படுத்துகை எந்தவொரு தடவையிலும் அவர்களது தேறிய மூலதனத்தின் நான்கு மடங்கை விஞ்சக் கூடாது. இந்தப்பணிப்பானது இலங்கை மத்திய வங்கியால் உரிமம் வழங்கப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படும் பதிவு செய்யப்பட்ட கடன் வசதி அளிப்பவர்களுக்குப் பொருந்தாது.

2011 மாச்சு 15 - பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு பணிப்பின்படி, ஆரம்பப் பொது வழங்கல் கீழ்வருமாறு ஒதுக்கப்பட வேண்டும்:

- வழங்கப்பட்ட பங்குகளில் குறைந்தது 40 சதவீதம் சிறிய தனியாள் முதலீட்டாளர்களுக்கு (ஆகக்கூடியது 3,000 பங்குகளுக்கு அல்லது குறித்த பங்கு வகையில் ரூபா100,000 இற்கு மேற்படாத பெறுமதிக்கு விண்ணப்பித்தவர்கள் இவற்றுள் உயர்வானது).
- வழங்கப்பட்ட பங்குகளில் குறைந்தது 10 சதவீதம் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம் வழங்கப்பட்ட வளர்ச்சி அல்லது சம நிலையான கூறுநம்பிக்கை நிதியத்திற்கு அத்தகைய கூறுநம்பிக்கைகள் 500இற்குக் குறையாத இலங்கையில் வதியும் கூறு வைத்திருப்பவர்களைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன் அவர்களின் ஒன்றிணைந்த பங்கு ஆகக் குறைந்தது நிதியத்தின் 50 சதவீதமாகவும் இருக்க வேண்டும்.

2011 மாச்சு 18 - காப்புறுதி நிறுவனங்களுக்கு புதிய கடன் தீராற்றல் எல்லை விதிகள் வழங்கப்பட்டன.

2011 ஏப்பிறல் 01 - கொழும்பு பங்குச் சந்தை பிரதான சபை மற்றும் திரிசவி சபையில் பட்டியலிடப்படுவதற்கான தகைமை விதிகள் கீழ்வருமாறு திருத்தப்பட்டன:

- கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படுவதற்கான கம்பனிகளின் கூறப்பட்ட மூலதனத் தேவைப்பாடு பிரதான பலகைக்கு ரூபா 100 மில்லியனிலிருந்து ரூபா 500 மில்லியனுக்கும் திரி சவி சபைக்கு ரூபா 35 மில்லியனிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கும் அதிகரிக்கப்பட்டது.
- பிரதான சபையால் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் சாதகமான தேறிய சொத்துக்களை 2 வருடங்களுக்கும் வரிக்குப் பின்னரான தேறிய இலாபத்தை 3 வருடங்களுக்கும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் திரி சவி சபையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் சாதகமான தேறிய சொத்துக்களை 1 வருடத்திற்குக் கொண்டிருக்க வேண்டும்.
- குறைந்தபட்ச பொதுமக்கள் வைப்பானது பிரதான சபை மற்றும் திரிசவி சபையின் மொத்தப் பங்குகளின் எண்ணிக்கையில் முறையே 25 சதவீதத்திற்கும் 10 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது.

2011 ஏப்பிறல் 28 - 2010 ஓகத்து 4இல் வழங்கப்பட்ட விலைப் பிரிவுகள் மீதான பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு பணிப்பிற்கு மேலதிகமாக, 10 சதவீத விலைப் பிரிவுகள் பிணையமொன்று கையகப்படுத்தப்படும் நாட்களின் எண்ணிக்கை 10 சந்தை நாட்களிலிருந்து 5 சந்தை நாட்களுக்கு மேலும் குறைக்கப்பட்டது.

2011 மே 19 - 2010 நவெம்பர் 29ஆம் திகதி பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு பணிப்பிற்கு மேலதிகமாக, பங்குத் தரகர்கள் அவர்களது எஞ்சியிருக்கும் 50 சதவீதமான கடன்பட்டோர் நிலுவைகளை தீர்ப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் பின்வருமாறு நீடிக்கப்பட்டது:

- எஞ்சியிருக்கும் கடன்பட்டோரில் 25 சதவீதம் 2011 செத்தெம்பர் இறுதிக்குள் தீர்க்கப்பட வேண்டும்
- மிகுதி 25 சதவீதம் 2011 திசெம்பர் இறுதிக்குள் தீர்க்கப்பட வேண்டும்.

2011 யூன் 24 - புதிய காப்புறுதிக் கம்பனிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு ரூபா 500 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

2011 ஓகத்து 16 - முதலீட்டாளர்களுக்கு கடன் வழங்குவதில் பங்குத் தரகர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் குறிப்பிட்ட முன்னேற்பாட்டு தேவைகளுக்குட்பட்டு பங்குப் பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் தளர்த்தப்பட்டது.

2011 ஓகத்து 26 - உரிமம் பெற்ற வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவம் மற்றும் பங்குச்சந்தைக்கான குறைந்த வெளிப்படுத்தல்களைக் கவனத்திற்கொண்டு பங்குகள் மீதான கடன் வசதிக்கான வரையறைகள் மட்டுப்படுத்தப்பட்டன.

2011 செத்தெம்பர் 23 - 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணத் தூயதாக்கல் தடைசெய்தல் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்கல் உடன்படிக்கை என்பன திருத்தப்பட்டன.

2012 பெப்புரவரி 02 - இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவுடன் கடன் வசதி வழங்குநர்களாக பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனிகள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் முதலீட்டாளர்களுக்கு கொடுகடன் ஏற்பாடுகளை வழங்கும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

2012 மாச்சு 01 - வெளிநாட்டு நாணய மாற்றில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டு நாணய மாற்றுக்கான விற்பனை மற்றும் / அல்லது கொள்வனவிற்கான முன்னோக்கிய ஒப்பந்தங்களை அதிகபட்சம் 90 நாட்களுக்கு மட்டுப்படுத்துமாறு பணிக்கப்பட்டனர்.